**சார்பு நீதிமன்றம், போளூர்**
**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, போளூர்,**

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14–ஆம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.1/2024 in O.S.No:23/2024**

இளவரசன் ...மனுதாரர்/வாதி

//எதிர்//

சங்கீதா மற்றும் மூவர் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 30.06.2025 –ம் தேதியன்று முடிவாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.E.யுவராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.N.ரகுபதி அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.

**ஆணையுரை**

மனுதாரர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா கடனுறுதி சீட்டு பாக்கித்தொகைக்காக இம்மனு சொத்துவிவரத்தில் கண்டுள்ள சொத்தினை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்ய வேணுமாய் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1. **மனுதாரர்/வாதியின் ஆணையுறுதி வாக்குமூலத்தின் சுருக்கம்: –**

மனுதாரரும் சத்தியமூர்த்தி என்பவரும் குடும்ப நண்பர்கள் என்ற அடிப்படையில் சத்தியமூர்த்தி மனுதாரரிடம் வேறு நிலம் வாங்குவதற்கும் குடும்ப செலவிற்காகவும் வேண்டி கடந்த 18.03.2022ம் தேதியில் கடனுறுதி சீட்டின் மூலம் தகுந்த சாட்சிகள் முன்னிலையில் மாதம் ஒன்றக்கு 100க்கு 2 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மனுதாரர் கேட்டும்போது திருப்பிதருவதாக ஒப்புக்கொண்டும் அசல் ரூ.2,00,000/–யை மேற்படி சத்தியமூர்த்தி கையெழுத்திட்டு கடனாக பெற்றார். மேற்படி சத்தியமூர்த்தி பெற்ற கடனுக்காக யாதொரு அசலையும் வட்டியையும் திருப்பிச்செலுத்தாமல் 13.07.2023 அன்று இறந்துவிட்டார். 1 முதல் 4

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மட்டுமே அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்ற முறையில் சத்தியமூர்த்தி பெற்ற கடனை எதிர்மனுதாரர்களே பைசல் செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேற்படி சத்தியமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்து கொண்டு வாங்கிய பணத்தை ஏமாற்றி அபகரிக்க முயற்சித்து வந்ததால் வாதி கடந்த 14.11.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பினை எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு தவறான சங்கதிகளை கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியதால் மனுவில் குறிப்பிட்டுள்ள அட்டவணை சொத்துக்களை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யுமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு மாறான பொய்யான தவறான சங்கதிகளாகும். 1-ம் பிரதிவாதி சங்கிதாவின் கணவர் சத்தியமூர்த்தி என்பவர் வாதியிடம் கடன் பெற்றதே கிடையாது. அதற்கான அவசியமும் சத்தியமூர்த்திக்கு ஏற்பட்டது கிடையாது. வாதியை ஒருபோதும் சத்தியமூர்த்தியும், இப்பிரதிவாதிகளும் நேரில் பார்த்ததும் கிடையாது அவர் யார் என்றே தெரியாது. மேற்படி வழக்கானது இப்பிரதிவாதிகளுக்குரிய சீட்டு பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற தவறான நோக்கத்துடனும் பழி வாங்கி அவமானப்படுத்தி வீணாக கோர்ட்டுக்கு இழுத்து அலகழிக்க வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் ரகு என்பவர் வாதியை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 38 பிரிவு 5ன் கீழான இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

4. வாதி தரப்பில் சாட்சியம் ஏதும் இல்லை வாதுரையின்போது சத்தியமூர்த்தி என்பவர் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு அசல், சத்தியமூர்த்தி என்பவர் மனுதாரருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர நகல் மற்றும் இறந்த சத்தியமூர்த்தி என்பவரின் வாரிசு சான்று நகல் ஆகியவைகள் முறையே ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ சான்றவணங்களோ அளிக்கப்படவில்லை.

5. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கடந்த 18.03.2022ம் தேதியில் கடனுறுதி சீட்டின் மூலம் தகுந்த சாட்சிகள் முன்னிலையில் மனுதாரர் கேட்டும்போது திருப்பிதருவதாக ஒப்புக்கொண்டும் அசல் ரூ.2,00,000/-யை மேற்படி சத்தியமூர்த்தி

கையெழுத்திட்டு கடனாக பெற்றார் என தெரிவித்துள்ளார். மேற்கண்ட கூற்றானது ம.சா.ஆ.1 யை பரிசீலிக்கையில் உண்மையென தெரியவருகிறது. மேற்படி சத்தியமூர்த்தி கடனை பைசல் செய்யாமல் காலம் கடத்தி வந்த நிலையில் மேற்படி சத்தியமூர்த்தி 13.07.2023 அன்று இறந்துவிட்டார் என்பதும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மட்டுமே அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதை ம.சா.ஆ.3 யை பரிசீலிக்கையில் உண்மையென தெரியவருகிறது. மேலும், சத்தியமூர்த்தி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்பதை நிரூபிப்பதற்கு மனுதாரர் ம.சாஆ.2 மற்றும் ம.சா.ஆ.4 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட ஆவணத்தை பரிசீலிக்கையில் தாவா சொத்து சத்தியமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது அறிந்துக்கொள்ள முடிகிறது. மேற்படி சத்தியமூர்த்தி கடனை பைசல் செய்யாமல் காலம் கடத்தி வந்த நிலையில் மேற்படி சத்தியமூர்த்தி 13.07.2023 அன்று இறந்துவிட்டார். 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மட்டுமே அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதால் மேற்படி சத்தியமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரதிவாதிகள் விற்பனை செய்ய முயற்சித்து வருவதால் மனுவில் குறிப்பிட்டுள்ள அட்டவணை சொத்துக்களை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யுமாறு வாதிட்டார். எதிர்மனுதாரர் தரப்பில் வாதியை ஒருபோதும் சத்தியமூர்த்தியும், இப்பிரதிவாதிகளும் நேரில் பார்த்ததும் கிடையாது அவர் யார் என்றே தெரியாது. மேற்படி வழக்கானது இப்பிரதிவாதிகளுக்குரிய சீட்டு பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற தவறான நோக்கத்துடனும் பழி வாங்கி அவமானப்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் ரகு என்பவர் வாதியை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளர் என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிட்டார்.

6. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும், நன்கு ஆராய்ந்து பரிசீலனை செய்ததில், மனுதாரர்/வாதியால் தாவா கடனுறுதிச் சீட்டின் பேரிலான பாக்கியை வசூல்செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதை இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், மனு சொத்தை விற்பனை செய்ய முயற்சித்து வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளதை எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டாலும், எதிர்மனுதாரர்கள் இனி வில்லங்கம் செய்யாமல் இருப்பதற்கான உறுதிமொழி ஆவணம் எதையும் சமர்பிக்கவில்லை. இந்நிலையில் மனுவில் கண்டுள்ள சொத்தினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் விற்பனை செய்யும்பட்சத்தில் தாவா கடனை வசூல் செய்ய இயலாமல போய்விடும்

என்று இந்நீதிமன்றம் கருதுவதால் மனுவில் கண்ட சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடுவதுதான் நீதியின்பால் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுவில் கண்ட சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடப்படுகிறது. உரிய சார்பதிவாளருக்கு தகவல் தெரிவிக்கவும். ஒரு வாரத்திற்குள் படி செலுத்த உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 20.08.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2025.07.14 11:05:44 +0530

சார்பு நீதிபதி,
போளூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

ம.சா.ஆ.1 – கடனுறுதி சீட்டு அசல்

ம.சா.ஆ.2 – பாகப்பிரிவினை பத்திரம் நகல்

ம.சா.ஆ.3 – வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.4 – EC வில்லங்கசான்று – பதிவிறக்க நகல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள்</u>** – இல்லை

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2025.07.14 11:05:51 +0530

சார்பு நீதிபதி,
போளூர்.